Registered as a News Paper in Sri Lanka   பக்கங்கள்: 04   விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02   திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 32   (16 07 1991)   செவ்வாய்க்கிழமை   ஓசை: 148

## கல்வி திணைக்களத்தில் சிங்களத்தில் ஊழல்

(யாழ்ப்பாணம்)

பொதுநிர்வாகச் சுற்றறிக்கை 44/90 இன் கீழ் சுயவிருப்பின் பேரில் 1.1 91 முதல் இளைப்பாறியுள்ள யாழ். கல்வித்திணைக்கள ஊழியர், ஆசிரியர்களில் சுமார் 300 பேரின் சுயவிபரக் கோவைகள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டு ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இளைப்பாறிய மேற் கூறியவர்களின் விண்ணப்பப் பத் (4 ஆம் பக்கம் பார்க்க)

# கட்டைக் காட்டில் பெரும் போர்

# இராணுவ முயற்சி முறியடிப்பு

## உயர் அதிகாரி உட்பட பல படை பலி

(கட்டைக்காடு)

கட்டைக்காட்டில் தரையிறங்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினரின் முயற்சி விடுதலைப் புலிகளின் கடும் எதிர்த் தாக்குதலினால் முறியடிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் ஒரு உயர் இராணுவ அதிகாரி உட்பட பல இராணுவத்தினர் உயிரிழந்ததாக அறியவருகின்றது. விடுதலைப் புலிகள் தரப்பிலும் பலர் வீரமரணமடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் மாலை தரையிறங்கிய சிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்று முன்தினம் இரவு தரையிறங்கிய இராணுவத்தினரும் சேர்ந்து கட்டைக்காடு கோடசாலை தேவாலயம் என்பனவற்றில் நிலை கொண்டனர். கட்டைக்காட்டில் இராணுவத்தினர் தரையிறங்கியபோது பலத்த மோதல் ஏற்பட்டதாயினும் நேற்றுக் காலையில் இம் மோதல் ஓய்ந்திருந்தது.

கட்டைக்காட்டில் தரையிறங்கிய இராணுவம் நேற்று பிற்பகல் 2-30மணியளவில் அங்கிருந்து ஆனையிறவு நோக்கி நகர முற்பட்டபோது மீண்டும் மோதல் ஆரம்பமானது. விடுதலைப் புலிகள் பலமான எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர்.

இருபகுதியினருக்கும் இடை (4 ஆம் பக்கம் பார்க்க)

## பாலைவனப்போர்

(கொழும்பு)

கட்டைக்காட்டுப் பகுதியில் பெருமளவு சிறிலங்கா இராணுவத்தினர் தரையிறக்கப்பட்டமையானது ஆனையிறவுப் பகுதியில் இரண்டாவது போர் முனை ஒன்றை உருவாக்கவே என சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள் காட்டி பி.பி.ஸி. அறிவித்தது.

அதேவேளை கட்டைக்காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் திறந்திருக்கும் இரண்டாவது போர்முனை யாழ் குடாநாட்டில் நடைபெறப்போகும் ஒரு பாலைவனப் போராகவே இருக்கும் என அவதானிகள் தெரிவிக்கின்றார்கள்.

## பலர் வீரமரணம்

(கட்டைக்காடு)

கட்டைக் காட்டுப் பகுதியில் இராணுவத்தினரோடு ஏற்பட்ட மோதலில் விடுதலைப்புலிகள் பலர் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்டைக்காட்டுப் பகுதியில் இராணுவத்தினர் தரையிறங்க முற்பட்டபோது இடம்பெற்ற கடும் சண்டையிலும் பின்னர் கட்டைக்காட்டிலிருந்து ஆனையிறவை நோக்கி நகர முயன்றபோது ஏற்பட்ட பலத்த துப்பாக்கிச் சண்டையிலும் வீரமரணங்கள் ஏற்பட்டதாக தெரியவருகிறது.

நேற்று பிற்பகல் இரண்டு மணியளவில் ஆரம்பித்த சண்டை தொடர்ந்தும் கடும் மோதலாக நீடித்து வருகிறது.

## ஆனையிறவு முகாம் விடுவிக்க மிகப்பெரும் தரையிறக்கம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள்ளாகியிருக்கும் ஆனையிறவு இராணுவ முகாமை மீட்பதற்குச் சிறிலங்கா இராணுவம் மிகப்பெரும் படையிறக்கம் ஒன்றை கட்டைக்காட்டுப் பகுதியில் மேற்கொண்டுள்ளதாகச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டிச் சிறிலங்கா வானொலிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாண இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த இரு இராணுவப் பிரிவுகள் ஆனையிறவு இராணுவத்தினருடன் சேர்ந்து போரிடுவதற்காக தரையிறக்கப்பட்டிருப்பதாக நேற்றிரவு கொழும்பு வானொலி தெரிவித்தது. இது பற்றி அவ்வானொலி மேலும் தெரிவிக்கையில் கடல் மார்க்கமாக மூவாயிரம் துருப்புக்கள் இறக்கப்பட்டதாகவும், இவர்கள் கஜபாகு படையணியின் முதலாம், இரண்டாம் பிரிவும், சிங்க றெஜிமென்டின் மூன்றாவது பிரிவும், இலங்கை இலகு காலாட்படையின் மூன்றாவது பிரிவும் அடங்கும் என்றும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மூடக்காட்டில் ஷெல் வீச்சு

## எழுத்தாளர் நெல்லை. க. பேரன் உட்பட நால்வர் பலி

(கரவெட்டி)

நெல்லியடியில் உள்ள மூடக்காடு எனும் இடத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற எறிகணைத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உயிர் இழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 11 45 மணியளவில் பலாலியில் இருந்து வீசப்பட்ட எறிகணைகள் மூடக்காடு எனும் இடத்தில் அடுத்தடுத்து வீழ்ந்தன. அப்பொழுது வீட்டினுள் தூங்கிக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பேரின்பநாயகம் நெல்லை க பேரன் (வயது 45), உமாவதி பேரின்பநாயகம் (வயது 36), பே. சர்மிளா (வயது 7) பே. உமாசங்கர் (வயது 15) ஆகியோர் உயிர் இழந்தனர்.

இதே வேளை மரணமானவரின் தாய், சகோதரி, மருமகள் ஆகியோர் பதுங்கு குழியினுள் பதுங்கிக் கொண்டதனால் எவ் (4 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் ஷெல் தாக்கி

## பல்கலை. விரிவுரையாளர் உட்பட இருவர் பலி

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் உட்பட இருவர் பலியாகியுள்ளனர். ஐவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 8-30 மணியில் இருந்து 11-30 மணிவரை சாவகச்சேரிப் (4ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதலை நிறுத்த அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் மீது கண்மூடித்தனமான முறையில் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதை உடன்நிறுத்துமாறு யாழ் அரச அதிபர் திரு மாணிக்கவாசகர் பாதுகாப்பு அமைச்சிற்கு அறிவித்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சுருக்கிட்டுமரணம்

(யாழ்ப்பாணம்)

அச்செழுவைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் கழுத்தில் சுருக்குப்போட்டுக் கொண்டதனால் மரணமடைந்துள்ளார். செல்லப்பா (வயது 87) என்ற வயோதிபரே இவ்வாறு நேற்று மரணமடைந்துள்ளார். இவரது மரணம் தொடர்பாக இன்று யாழ். போதனா மருத்துவமனையில் சட்ட வைத்திய அதிகாரிகள் விசாரணை நடாத்த உள்ளனர். (ஈ)

## வெவ்வேறு மோதல்களில் ஆறு இராணுவம் பலி

(கொழும்பு)

அனுராதபுரம், திருகோணமலை மாவட்டங்களில் நடந்த வெவ்வேறு சம்பவங்களில் இராணுவத் தரப்பில் ஆறுபேர் நேற்றுக் கொல்லப்பட்டிருப்பதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனைக்கு சமீபமாகவுள்ள கண்ணகிபுரம் கிராமத்திலும் மோதல் சம்பவமொன்று இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கொழும்பில் கூறியுள்ளன.

## மலர் தூவி மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி

(சுச்சமோட்டை)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த 20 வீரவேங்கைகளின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் உரும்பராய் அன்னை பூபதி கலையரங்கில் வைக்கப்பட்டது.

பின்னர் 3 மணியளவில் பலாலி வீதியூடாக வாகனங்களில் புகழுடல்கள் கொண்டு செல்லப்படும்போது மக்கள் தமது இல்லங்களுக்கு முன்னால் குத்துவிளக்கேற்றி, மலர்தூவி வீரவேங்கைகளுக்கு அஞ்சலி செலுத்தினர். பின் உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் 20 வேங்கைகளின் புகழுடல்களும் வைக்கப்பட்டபோது (4 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் மரணத்துடன் புலிகளுக்கு சம்பந்தமுண்டு

**- எஸ். பி. சவான்**

(டில்லி)

ராஜீவ் காந்தியின் மரணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அதிகளவில் சம்பந்தப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

நேற்று ராஜ்ய சபாவில் உரையாற்றிய எஸ். பி. சவான் ராஜீவ் காந்தியின் மரணம் தொடர்பான சிறப்புப் புலன் விசாரணையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பங்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

## ஆசிரியர்கள், ஊழியர்களுக்கு

# கடன் வழங்க பணம் பற்றாக்குறை

(நல்லூர்)

யாழ். கல்வித்திணைக்களத்திலும், கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் கடன் வழங்கப் பணம் பற்றாக்குறையாக உள்ளது.

ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் 6 மாத, 2 வருடக் கடன்களை வழங்கப் போதியளவு நிதி ஒதுக்கீடு கொழும்பு மத்தியக்கல்வியமைச்சில் இருந்து ஒழுங்காகக் கிடைப்பதில்லை என யாழ். கல்வித் திணைக்களக் கணக்குப் பிரிவு மூலம் தெரியவந்துள்ளது.

கடன்கள் தொடர்பான விண்ணப்பங்களை மாதா மாதம் மட்டுப்படுத்தி குறிப்பிட்ட அளவு தொகையான விண்ணப்பங்களையே யாழ். பிரதேசக் கல்விப் பணிமனைக்கு அனுப்புமாறு சகல கோட்டக்கல்வி அதிகாரிகளையும் யாழ். கல்வித்திணைக்களம் பணித்துள்ளது.

சம்பள முற்பணக் கடன்கள் பெற்றவர்களிடமிருந்து மாதா மாதம் அறவிடப்படும் கழிவுகளிலிருந்தே புதிய விண்ணப்பங்களுக்குக் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் காரணமாக மாதா மாதம் சகல கோட்டங்களிலிருந்தும் சுமார் முப்பது விண்ணப்பங்களே பரிசீலிக்கப்பட உள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## கூட்டுறவு மாநாடு

உணவுப்பங்கீடு சம்பந்தமான கூட்டுறவு மாநாடு நாளை புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு யாழ்ப்பாணம் மணிக்கூட்டடியில் உள்ள தேசிய கூட்டுறவுச் சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இம்மாநாட்டிற்கு யாழ். மாவட்டத்திலுள்ள சகல ப.நோ.கூ. சங்கத் தலைவர்களும், பொது முகாமையாளர்களும், சங்கங்களுக்குப் பொறுப்பான பிராந்திய கூட்டுறவுப் பரிசோதகர்கள், கூட்டுறவுப் பரிசோதகர்கள் ஆகிய அனைவரையும் பங்குபற்றுமாறு யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார். இம்மாநாட்டுக்கு மக்கள் முன்னணி பிரமுகர்களும், கூட்டுறவுப் பகுதியினரும் சமூகம் தருவர்.


## அறிவித்தல்

லங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மாணவர்கள் அனைவரையும் இன்று மதியம் (16-07-1991) 12-00 மணிக்கு கல்லூரியில் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு
மாணவர் மன்றம்

(R/1546)

## 90-ம் நாள் நினைவஞ்சலி



### லெப்டினன்ட் கேணல் கிறேசி

அரும்பாய்
19.08.1961

வித்தாய்
19.04.1991

ஈழ மண்ணின் விடிவிற்காய் பல வருடங்கள் காத்திருந்தீர்கள். அன்பு வாழ்க்கையில் ஒரு வருடம்கூட காத்திருக்க விடவில்லையே இத் துட்டர்கள். போராட்டம் என்பதும் வாழ்க்கை என்பதும் இதுதான். அதில் நாம் சாகலாம் அதுதான் இயக்கத்திற்கு பெருமை செய்வோம் அல்லது இப் புனிதமான மண்ணில் செத்து மடிவோம் என்ற உங்கள் வார்த்தை மறையவில்லை. மறைக்கப்படவுமில்லை.

தமிழீழத்திற்காக பதித்த உமது சுவடுகள் மேல் எமது சுவடுகளும் பதியட்டும்.

அன்புடன்
மனைவி

(B/2814

## வைத்தியசாலையில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

மாணவர் இயக்க உறுப்பினர்கள் முப்பதிற்கும் அதிகமானோர் நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் சிரமதான வேலைகளில் ஈடுபட்டனர். காலை ஒன்பது மணிமுதல் நடந்த சிரமதானப் பணியில் பெருமளவில் பெண்கள் பங்குகொண்டனர். (85)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இம்மாதம் 25, 26, 27 ஆம் திகதிகளில் தேர், தீர்த்தம், பூங்காவன உற்சவங்கள் நடைபெறவுள்ளன. காலசூழ்நிலை கருதி பூஜை உற்சவ நேரங்கள் மாற்றப்படலாம் என தேவஸ்தான ஆதீனகர்த்தா அறிவித்துள்ளார்.

## தீவகத்திலேயே உணவு விநியோகம்

(வேலணை)

தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். குடாநாட்டில் இருந்த மக்களுக்கு தீவகத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் யாழ்ப்பாணத்தில் வைத்து வழங்கப்பட்ட அனைத்து நிவாரணங்களும் நிறுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ள அனைத்து நிவாரணப் பொருட்களும் இனிமேல் தீவகத்திலேயே வைத்து அந்தந்த பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் கிளைகள் ஊடாகவே விநியோகிக்கப்படவுள்ளன. புங்குடுதீவில் உள்ள மக்களுக்கு புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் வேலணையில் உள்ள ப.நோ.கூ. சங்கம் வேலணையிலும் ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம் மண்கும்பானிலும் வைத்து தமது எல்லைக்குட்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கும் எனவும் கூறப்பட்டுள்ளது. (14)

## சிரமதானம் மூலம் மைதானம்

([illegible])

சிரமதான பணிமூலம் பாண்டியன்தாழ்வு றெஸ்ரர் விளையாட்டுக் கழகத்தினர் தமக்கென விளையாட்டு மைதானம் ஒன்றை புங்கன்குளம் வீதியில் அமைத்துள்ளனர்.

மேற்படி மைதானம் சென்ற சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்ட நிகழ்ச்சியில் மாவீரர்கள் நினைவாக நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (43)

## கிரிக்கெட் போட்டிகள்

(யாழ். விளையாட்டு நிருபர்)

றெ தோர்ண் ஸ்போட்ஸ் சஞ்சிகையின் ஆதரவில் "நொக்கவுட்" மென்பந்து கிரிக்கெட் போட்டி 6 ஓவர் கொண்ட 6 பேர் போட்டியும், 20 ஓவர் கொண்ட 11பேர் போட்டியும் இம்மாதம் 26-ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

11பேர் கொண்ட 20 ஓவர் போட்டியில் வெற்றி பெறும் கழகத்திற்கு "போர்க் வெற்றிக்கிண்ணம் வழங்கப்படவுள்ளது.

6 ஓவர் கொண்ட 6 பேர் போட்டியில் வெற்றி பெறும் கழகத்திற்கு "றொதோர்ண் ஸ்போட்ஸ் சஞ்சிகையின் வெற்றிக்கேடயம் வழங்கப்படவுள்ளது.

இப்போட்டிக்கான விபரங்களை திரு இ. இராஜேந்திரராஜா 338 பருத்தித்துறை வீதி, நல்லூர் 136 கச்சேரி நல்லூர் வீதி என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (42)

## நினைவு கூருகின்றோம்...

1991-07-16



லெப். கேணல் றீகன்



லெப். ஜிம்பிறவுண்

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரமரணமெய்திய

★ கோணாமலை இராசநாயகம் (மல்லிகைத்தீவு)
★ ஜெயசங்கர் (இருதயபுரம்)
★ இராசநாயகம் (மணற்சேனை)
★ சின்னத்துரை குணநாயகம் (பெரியவெளி)
★ மு அருளம்பலம் (பெரியவெளி)

நெடுங்கேணியில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

ராஜ்குமார் (ஆசைப்பிள்ளை ஆசீர்வாதம் - மணற்குடியிருப்பு)
சசி (விசுவநாதன் சிவலிங்கநாதன் - வவுனிக்குளம்)

1988 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய

சுமன் (குமாரசாமி சந்திரசேகர் - கிளிநொச்சி)
மோகன் (கிளிநொச்சி)

சுழிபுரத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

கப்டன் காசிம் (பிரஞ்சிப்பிள்ளை ஜெகநாதன் - வாழ்க்கைப்பட்டான் கண்டல்)

செல்வநகரில் இந்தியப்படை மற்றும் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரமரணமெய்திய

ஜெயக்கொடி (நாராயணன்பிள்ளை ஜெயச்சந்திரன் - கிளிநொச்சி)

பொத்துவில் இன்ஸ்பெக்டர்ஏத்தம் பகுதியில் இந்தியப் படையினராலும் தேசவிரோதிகளாலும் சுட்டுக் கொல்லப்பட்ட

★ ஜெயா (இ. ஜெயசீலன் - பொத்துவில்)

அம்பாறை றொட்டையில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழ் விவசாயிகள்

1989 ஆம் ஆண்டு 35 ஆம் கிராமத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

தயாளன் (கணபதிப்பிள்ளை நாராயணன் - துறைநீலாவணை)
சிராசன் (மட்டுநகர்)
ஈஸ்வரன் (மட்டுநகர்)

1990 ஆம் ஆண்டு பாலையடி வெட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில வீரமரணமெய்திய

லெப். கேணல் றீகன் (இராசையா சிற்றம்பலம் - செல்லாவெளி)

மாங்குளத்தில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

குணம் (செல்லரத்தினம் சுரேந்திரகுமார் - ஐந்து வேம்படி, தாவடி)

யாழ். கோட்டையில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

லெப். ஜிம்பிறவுண் (பரராசசிங்கம் மகேந்திரராசா - மகேந்திரா வீதி, நல்லூர்)

மட்டக்களப்பு மகிழடித்தீவில் அவ்ரோவிமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 5 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-2312)

### சிந்தனைக்கு

நம்மால் முடியும் என்று எண்ணி உணர்ந்தால், பெரும்பாலும், நம்மால் முடியும்.

— ஜோசெல் ஹான்ஸ்


## ஈழநாதம்

81, மகேந்திரவீதி, யாழ்ப்பாணம், 16.07.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


# உயிர் வாழ்வதற்காகப் போராடுவோம்

ஆனையிறவில் மூண்டுள்ள யுத்தம் வாரக்கணக்கில் நீடிக்கலாம் எனத் தெரிகின்றது. போர்க்களம் எத்திசை நோக்கிச் செல்லினும் வடமாகாணத்தில் போடப்பட்டுள்ள ஊரடங்கோ, அன்றி வடமாகாணத்தின் மீது விதிக்கப்பட்ட தடைகளோ உடன் நீக்கப்பட்டுவிடும் என்று எண்ணுவதற்கில்லை.

கடந்த ஒருவருட காலத்திற்கு மேலாக நீடிக்கும் பொருளாதாரத் தடையால் பொருட்களுக்கு நிலவி வந்த தட்டுப்பாடுகள் மேலும் தீவிரமடையும் என்பது சொல்லித் தெரிய வேண்டும் என்பதில்லை. உணவு மருந்து, எரிபொருள் பற்றாக்குறை மேலும் தீவிரமாகலாம். இதில் எரிபொருளை மக்கள் பெரும்பாலும் மறந்துவிட்டார்கள்.

யாழ் மாவட்டத்திற்கு உடன் உணவு அனுப்பப்படாவிட்டால் பெரும் பஞ்சம் ஏற்படலாம் என யாழ் அரச அதிபர் எச்சரித்துள்ளார். பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதியில் ஊரடங்கைத் தளர்த்தி உணவு இறக்குவதற்கு ஆவன செய்யுமாறு அத்தியாவசிய சேவைகள் நாயகத்தைக் கேட்டுள்ளார். அதேவேளை இதற்கான முயற்சிகளில் ஈடுபடுமாறு யாழ் குடாநாட்டில் செயற்படும் மனிதநேய ஸ்தாபனத்திடமும் அரச அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேபோன்று மருந்துக் கையிருப்பும் வெகுவாகக் குறைந்துள்ளது. யாழ் போதனா வைத்தியசாலையின் கையிருப்பில் இருக்கும் மருந்து ஒரு சில வாரங்களுக்கே போதுமானது எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய இந்தத் தட்டுப்பாடுகள், பற்றாக்குறைகள் ஆனையிறவில் தற்பொழுது மூண்டுள்ள போரினால் மட்டுமே ஏற்பட்டவையல்ல. உணவு மருந்துப் பற்றாக்குறை கடந்த ஒருவருடமாகவே இருந்து வருகின்றது. அதுவும் கடந்த சில மாதங்களாக அனுப்பப்படும் கப்பல்களின் தொகையும், உணவின் அளவும் குறைந்துகொண்டே வந்தது. இது தொடர்பாக முன்னரே பிரஸ்தாபிக்கப்பட்டும் வந்தது. வாராந்த நிவாரண உணவு வழங்குவதற்கே கப்பலின் வரவை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்க வேண்டியுள்ளது. அதேபோன்று மருந்துப் பொருள்களுக்கும் கப்பலை எதிர்பார்த்தே இருக்கவேண்டியிருந்தது.

இது திட்டமிட்ட அரசாங்கத்தின் பொருளாதாரத் தடையின் ஒரு பகுதியே ஒழிய ஆனையிறவு மோதலின் பலாபலன் அல்ல. ஆனால் தமிழரைக் கொன்றொழிக்கத் திட்டமிட்டுள்ள சிறிலங்கா அரசாங்கம் இம்மோதலையும் ஒரு சாட்டாகப் பயன்படுத்தலாம்.

இந்நிலையில், ஆனையிறவில் நிகழும் ஆயுதப் போராட்டத்தை தமிழ் மக்கள் சவாலாக எடுத்துக்கொண்டது போல் இந்தப் பொருளாதார / உணவு, மருந்து என்பனவற்றிற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளையும் சவாலாக எடுத்துக் கொண்டாலே போராட்டம் வெற்றிபெற முடியும்.

கடந்த வருடம் பொருளாதாரத் தடைகள் ஒன்றொன்றாக விதிக்கப்பட்டபோது இதில் எவ்வாறு தப்பிப் பிழைக்கப் போகிறோம் என்ற அச்சத்தை வெளிப்படுத்திய மக்கள் தமது தீவிர முயற்சியினால் அதில் ஓரளவு வெற்றி பெற்றனர். அதேபோன்று, தற்பொழுது மேற்கொள்ளப்படும் தடைகளில் இருந்தும் மக்கள் தப்பித்துக் கொள்ள தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இதற்காக மக்கள் சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்ய வேண்டும். தமது தேவைகளைச் சுருக்கி சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பணம்படைத்தவர்களும் தமது தேவைக்கு மீறியவற்றை பதுக்கும் நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது. வர்த்தகர்களும் கொள்ளை இலாப நோக்கத்துடன் செயற்படக்கூடாது. இப் போராட்டச் சூழலில் அன்றாடம் உழைத்துச் சாப்பிடும் தொழிலாளியின் உயிருக்கு கெடுதல்களை ஏற்படுத்திவிடக் கூடும்.

கடந்த வருடம் போர் ஆரம்பித்தபோதே போராட்டச் சூழலில் எதுவும் நிகழலாம். உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்குமாறு புலிகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்த வண்ணமே இருந்தனர். ஆனால் பெரியளவில் உற்பத்தி நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படவில்லை. ஆனால், தற்போது தோன்றியுள்ள நெருக்கடி ஒரு படிப்பினையாகும். இப்படிப்பினை எதிர்காலத்திற்காயினும் பயன்பட வேண்டும். ஏனெனில் இன்னும் பல மோதல்கள் தமிழர் பிரதேசத்தில் நடைபெறுவது தமிழீழ விடுதலைக்குத் தவிர்க்க முடியாததாகவுள்ளது.

விடுதலைப் புலிகள்

# கலை, பண்பாட்டுக் கழகத்தின்

# முத்தமிழ் விழா மலர் - 1991

## — ஒரு நோக்கு

கலாநிதி நா. சுப்பிரமணியன்
முதுநிலை விரிவுரையாளர்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

இம்மலரிலே காசிஆனந்தன், கருணாகரன், நாக. சிவசிதம்பரம், ச. வில்வரட்ணம், முருகையன், பைப், தமிழேந்தி, ரவி, மு. வே. யோ. வாஞ்சிநாதன், நாவண்ணன் ஆகியோரின் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இவை பொதுவாக தமிழ் உணர்வு, யுத்த சூழல்சார் உணர்வோட்டங்கள் முதலியவற்றைப் பிரதிபலிப்பன. இத்தகு பொருண்மைகளில் சமகாலத்தில் எழுதப்பட்டுப் பல்வேறு இதழ்களிலும் நூலுருவிலும் வெளிவந்துள்ள பெருந்தொகையான கவிதைகளை நினைவில் மீட்கும் போது இம்மலர்க் கவிதைகளிற் பல தனிக் கவனத்தை ஈர்க்கத்தக்க தரத்தில் அமைந்தில. தரமான சில கவிதைகளில் நாக. சிவசிதம்பரம், முருகையன், வில்வரட்ணம் என்போருடையவை அடங்கும். இவற்றுள் நாக சிவசிதம்பரம் அவர்களின் 'நிழல் போதும் என்றால்' என்ற தலைப்பிலமைந்த கவிதை இம்மலரின் தொனியாக அமைந்த பொருட் சிறப்புடன் உணர்வைத் தொடும் வகையில் அமைந்துள்ளது. நிழல் போதும் என்று களையாற வேண்டாம் தொடர்ந்து செயற்படு விடுதலை எல்லை கண்ணுக்குத் தெரிகிறது.'' இது இக்கவிதை விடுக்கும் செய்தியாகும்.

..............................

நிழல் போதுமென்று
களையாற நேரின்
துயர் நூறு வந்து
சூழும்

..............................

நிலவு விழு வானில்
விடிபொழுது கூட
நடு இரவு போலிருந்தாலும்
மூடுபனியோடு
இருள் அழுதென்று
முகை அவிழும் பூக்கள்
சொல்லும்...

இக் கவிதைவரிகளுக்கு நமது நெஞ்சத்தைத் தொடும் ஆற்றல் உண்டு. முருகையன் அவர்களது 'சுதந்திரத்தின் சங்கீதம்' என்ற கவிதை போராளர் திறம் போற்றுவது. அதில் உள்ளம் தொட்ட ஒரு பகுதி:

''போராளர் யார்
என்றால்...
சொந்த மண்ணின்
புனிதநிலை உணர்ந்து
கொண்டு
புலியாய் நிற்போர்
யாவரும்
ஒடுக்காமல் உரிமைபெற்ற
இனிய விடுதலை அடைய
வேண்டும்
என்போர்.
சாவினையும் குளிகையாய்
உருட்டிப் பூண்டோர்
சரித்திரத்தின் நாயகர்கள்
தமிழர் நெஞ்சில்
ஓவியமாய் அழியாமல்
அமர்ந்திருப்போர்
உணர்ச்சி எனும்
உன்னதத்தின்
உயிராய் உள்ளோர்.''

(தொடரும்)

# நீண்டதூர ஏவுகணை குறித்து அமெ. சோவியத் இணக்கம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவிற்கும், சோவியத்யூனியனுக்கும் தொலைதூர ஏவுகணைகளை குறைப்பது பற்றிய இறுதி ஒப்பந்தத்தில் காணப்பட்ட முரண்பாடுகள் பெருமளவு தீர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு நுட்பப் பிரச்சினை தவிர்ந்த தீர்க்கப்படாமலிருந்த எல்லாப் பிரச்சினைகளும் இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகளின் போது தீர்க்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக லண்டனில் நாளை புதன்கிழமை லண்டனில் சோவியத் வெளியுறவு அமைச்சரும் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜேம்ஸ்பேக்கரும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இதன் பின்னர் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சும், சோவியத் ஜனாதிபதி கோர்பசேவும் வரும் 27 ஆம் 28 ஆம் திகதிகளில் சந்தித்து ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார்கள்.

## மேலும் ஐவரைக் கைது செய்யவேண்டியுள்ளது

(கொழும்பு)

கொழும்பில் கூட்டுப்படைத் தலைமையகத்தில் குண்டு வெடித்தது தொடர்பாக மேலும் ஐந்து பேரை கைது செய்ய வேண்டி இருப்பதாக சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ரவிக்குமாரன் [illegible] உட்பட இந்த ஐந்து பேரையும் கைது செய்தால் முன்னாள் சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் கொலை பற்றிய முழுத்தகவலும் கிடைக்கும் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

## மாத்தளையில் தீவிர தேடுதல்

(மாத்தளை)

மாத்தளைப் பகுதிகளில் உள்ள தோட்டங்களில் தீவிர தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிறிலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தமக்கு இரகசியமாக கிடைத்த தகவலை அடுத்து மாத்தளை வெல்லவெளியிலுள்ள 27 தோட்டப்பகுதிகளில் தீவிர சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இந்தத் தோட்டம் முழுவதையும் தாம் முற்றுகையிட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

## பிணையில் 5 இளைஞர்கள்

(சென்னை)

தமிழகத்தில் போலிக்கடவுச்சீட்டு வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதான ஐந்து இலங்கைத்தமிழ் இளைஞர்கள் பிணையில் விடப்பட்டுள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் கொண்டுவரப்பட்ட இந்த வழக்கில் இந்த ஐந்து இளைஞர்களும் ஆயிரம் ரூபாய் பிணையில் விடப்பட்டனர்.

இவர்கள் போலிக்கடவுச்சீட்டு வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

## இல. தமிழர் தொடர்பாக பிரிட்டனுக்கு பொறுப்புண்டு

பிரித்தானியப் பிரதமரும் பிரித்தானிய நாட்டிற்கும் இலங்கைத்தீவில் வாழும் தமிழ் மக்கள் தொடர்பாக முக்கியமான பொறுப்பொன்று உள்ளது என்று யாழ் பிரஜைகளால் பிரித்தானியப் பிரதமர் ஜோன் மேயருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜர் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜருடன் சேர்க்கப்பட்டுள்ள ஐந்து இணைப்புக்களில் பிரித்தானிய அரசு வெளியிட்டுள்ள கருத்துக்கள் பற்றி அது புதிய யோசனைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற வகையில் விளக்கம் தரப்பட்டுள்ளது.

தமிழ் ஈழம் மீது சிறிலங்கா அரசு பாராட்டும் இறைமை சட்டத்திற்குப் புறம்பானது. வெளிநாட்டு அரசுகள், தமிழ் ஈழம் சிறிலங்காவின் ஒரு புறம்பான பிரதேசம் என்பதை மிகவும் அங்கீகரிக்க வேண்டும். இவ்வகையில் தார்மீகமானதும், சட்டரீதியானதுமான பொறுப்பு பிரித்தானிய அரசுக்கு உண்டு என்று மகஜருடன் சேர்த்து அனுப்பப்பட்டுள்ள முதலாவது இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

19ஆம் திகதிக்குள்

## பதிவு செய்யாதோர் உடன் வெளியேற்றப்படுவர்

(சென்னை)

தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் வரும் பத்தொன்பதாம் திகதிக்குள் பொலிஸ் நிலையங்களில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

இவ்வாறு தமது பெயர்களை பதிவுசெய்து கொள்ளத் தவறுபவர்கள் உடன் வெளியேற்றப்படுவர் என்றும் தமிழக அரசு எச்சரித்துள்ளது.

# பாரிய வங்கிக் கொள்ளைகளில் சிறிலங்காப் பெரும் புள்ளிகள்

(கொழும்பு)

அரச வங்கிகளான இலங்கை வங்கியிலும், மக்கள் வங்கியிலும் கடன் பெற்றவர்கள் திரும்பக் கட்டத் தவறிய கடன் தொகை ரூபா 6,000 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

பழைய கடன், தவணை கடந்த கடன் ஆகிய இரு வகைக் கடன்களிலும் 1977 முதல் மார்ச் 89 வரையான காலப்பகுதியில் ரூபா 6,000 கோடி மீளவும் செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது. இந்த வகையிலான தொகை இன்றுவரை ரூபா 12,000 கோடியாக அதிகரித்திருக்கலாம் என்று நிதி ஆலோசகர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

மக்கள் வங்கியும்; இலங்கை வங்கியும் நீண்ட காலமாக வரவு செலவுக் கணக்கை உரியபடி சரியாகச் சமர்ப்பிப்பதில்லை என்றும் குற்றம் சாட்டப்படுகிறது. கடனாளி ஒருவர் வங்கிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 450 லட்சம் பணத்தை தள்ளுபடி செய்யும் போது கூட வங்கி முகாமையாளர் தன்னிச்சையாக நடந்துள்ளார் என்றும், பாராளுமன்ற அங்கீகாரத்தைப் பெற வங்கி தவறியுள்ளதாகவும் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, பாரிய கடன்களை மறைக்கும் வகையில் வங்கிகள் மொத்த வருமானத்திலிருந்து கடன் தொகையைக் கழித்து, மிகுதியை நிகர லாபமாகக் காட்டி வருகின்றன என்று நிதி வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கின்றன! ஜனாதிபதி ஆர். பிரேமதாசவும், கொழும்பு வங்கிக் கிளைகளில் கணக்கு வைத்திருக்கும் பெரும் முதலாளிகளே இந்தப் 'பாரிய வங்கிக் கொள்ளையில்' ஈடுபட்டுள்ளதாகப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். ஜே. ஆர். காலம் முதல் இன்று வரை இழுபடும் இந்த 'வங்கிக் கொள்ளை' பற்றி விசாரிக்க ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும்படி பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தரப்பில் கோரிக்கை விடப்பட்டது. இந்த விவகாரம் குறித்து விசாரிக்க ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும்படி பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரா 1990 டிசம்பர் 11ஆம் திகதி ஜனாதிபதி ஆர். பிரேமதாசவுக்கு கடிதம் ஒன்று எழுதியிருந்தார். உரிய நடவடிக்கைக்காகக் கடிதம் நிதி அமைச்சுக்குக் கையளிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் 1991 ஜனவரி 8ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் வாசுதேவ நாணயக்காரவுக்கு அறியத் தந்துள்ளார்.

## டில்லியில் வங்கிக் கொள்ளை நால்வர் சுட்டுக்கொலை

(டில்லி)

டில்லியில் வங்கி முகாமையாளர் உட்பட நான்கு பேரைச் சுட்டுக் கொன்று கொள்ளையர்கள் நால்வர் வங்கிக் கொள்ளை ஒன்றை நடாத்தினர்.

டில்லியில் தொழில் பேட்டைப் பகுதியிலுள்ள வங்கி ஒன்றின் கிளை அலுவலகத்தில் ரூபா 2 லட்சத்தை அவர்கள் கொள்ளையடித்துள்ளனர்.

இந்த ஆண்டில் தலைநகரான டில்லியில் இது இரண்டாவது வங்கிக் கொள்ளையாகும்.

## பாடசாலை தொடர்பாக ஆலோசனைக் கூட்டம்

(நல்லூர்)

பாடசாலை நடாத்தல் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமொன்று யாழ் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தலைமையில் நாளை புதன்கிழமை (17 - 7 - 91) காலை 9 - 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு சகல கொத்தணி அதிபர்கள், தேசிய கல்லூரி அதிபர்கள், தனியார் கல்லூரி அதிபர்கள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர்கள் அனைவரையும் தவறாது சமூகம் தரும்படியும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கல்வி சார் மூத்த உறுப்பினர்கள் கலந்து கொள்ளுவர் என்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## நெல் கொள்வனவு தொடர்பாக கூட்டுறவுப்பிரதிநிதிகளுடன் அரச அதிபர் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்வது சம்பந்தமாக கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளுடன் யாழ். அரச அதிபர் நேற்று ஆலோசனை நடத்தியுள்ளார்.

இக்கூட்டத்தில் நெல்லைக் கொள்வனவு செய்தல், நெல்லைக் களஞ்சியப்படுத்தல் மக்கள் வங்கியூடாகக் கடன் பெறுதல் சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டது.

### கல்வி

திரட்டுகள் சிங்களத்திலேயே நிரப்பி அனுப்பப்பட வேண்டும் என்னும் நியதிக்கிணங்க இவை அனுப்பப்படுவதாகவும் வரலத்திரட்டுகள் ஆங்கிலத்தில் நிரப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு ஓய்வூதியப் பணிப்பாளர் அலுவலகத்தில் தமிழ் தெரிந்த ஊழியர்கள் இல்லாத காரணத்தினாலேயே இவ்வாறு அனுப்பப்படுவதாகவும் மேற்கூறிய வேலைகளை நிறைவு செய்து அனுப்புவதாலேயே ஓய்வூதியக் கொடுப்பனவுக்குரிய கடிதங்கள் தற்போது விரைவில் வருவதாகவும் யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன,

மேலும் சுயவிபரக் கோவைகள் பிறப்புச் சான்றிதழ்கள் தமிழில் இருந்தால் அவைகளை ஆங்கில சிங்கள மொழி பெயர்ப்புடன் அனுப்பாததன் காரணமாகவும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தாமதம் அடைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஷெல்

இத் தாக்குதலால் அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டு வருவதாகவும், பொதுமக்களின் சொத்துக்களே சேதமடைந்து வருவதாகவும் மேற்படி அமைச்சின் கவனத்திற்கு அரச அதிபர் கொண்டுவந்துள்ளார்.

### பல்கலை

பகுதியில் பல இடங்களிலும் பலாலி இராணுவ முகாமில் இருந்து ஷெல்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

இதில் நுணாவில் பகுதியில் ஷெல்லொன்று வீழ்ந்து வெடித்ததில் வீட்டிலிருந்த யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. ரஞ்சகுமார் (வயது 28) என்பவர் கொல்லப்பட்டார். பெரிய சங்கத்தானைப் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் நீதிமன்ற ஊழியரான திரு எஸ். கணபதிப்பிள்ளை என்பவர் கொல்லப்பட்டார்.

இத் தாக்குதலில் கனகேஸ்வரி (வயது 40 சங்கத்தானை) லத்தீஸ் லூர்து நாயகம் வயது 40 (கச்சாய் வீதி) ஆகியோர் படுகாயமுற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமுற்ற மேலும் மூன்று பேர் சாவகச்சேரி அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் (மு) 86)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திர வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## காங்கிரஸ் அரசாங்கம் வாக்கெடுப்பில் வெற்றி

(டில்லி)

இந்தியப் பாராளுமன்றத்தில் பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் இருநூற்றுநாற்பத்தியொரு வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றுள்ளது. நம்பிக்கை வாக்கெடுப்பில் அரசுக்கெதிராக நூற்றுப்பன்னிரண்டு வாக்குகள் போடப்பட்டிருந்தன. இந்திய கம்யூனிஸ்ட், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், பார்பார்ட் பிளக் கட்சிகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. பாரதீய ஜனதாவும், ஜனதா தளமும் அரசுக்கு எதிராக வாக்களித்தன. அனைத்துஇந்திய அ.தி.மு.க உட்பட வேறு சில கட்சிகளும் அரசுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

பிரச்சினைகளின் அடிப்படையில் அவ்வப்போது அரசுக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் என்று விவாதத்தில் குறிப்பிட்டுப்பேசிய பிரதமர் பி.வி. நரசிம்மராவ் கூறினார்.

## ஆசிரியர் ஓய்வூதியங்கள் வரத் தொடங்கியுள்ளன

(நல்லூர்)

சுய விருப்பத்தின் பேரில் இளைப்பாறிய யாழ் கல்விப் பிராந்திய ஆசிரியர்கள் ஊழியர்களின் தற்காலிக, நிரந்தர ஓய்வூதியக் கொடுப்பனவுகள் யாழ். கச்சேரி ஓய்வூதியக் கிளைக்கு வர ஆரம்பித்துள்ளன.

இதுவரை சுமார் 100 தற்காலிக ஓய்வூதியக் கொடுப்பனவுக்குரிய கடிதங்களும், சுமார் 20 நிரந்தர ஓய்வூதியக் கொடுப்பனவுக்குரிய கடிதங்களும், தமக்குக் கிடைத்துள்ளதாகவும் கல்வித் திணைக்கள ஓய்வூதிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இளைப்பாறியவர்கள் ஓய்வூதியத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தியதும் சம்பந்தப்பட்டவர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் யாழ்.கச்சேரியில் வழங்கப்படும்

ஆசிரியர்கள் கல்வித் திணைக்கள ஊழியர்களின் சகல ஓய்வூதிய கொடுப்பனவுகளும் 1-1-91 முதல் யாழ். கச்சேரியிலேயே வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## பொதுக்கூட்டம்

இன்றைய போராட்ட சூழலில் அவசர உதவி வேண்டும் போராளிகளுக்கு உதவும் வழிவகைகள் பற்றி ஆராய்வதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அவசர பொதுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை ஒரு மணிக்கு சிரேஷ்ட பொது அறையில் இடம் பெறவுள்ளது. சகல அங்கத்தவர்கள் அனைவரையும் வருகை தரும்படி செயலாளர் கோருகின்றார்.

## இந்திய வானொலி விசமம்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைச் சம்பவத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தொடர்புபடுத்தி இந்திய வானொலி விசமத்தனமான பொய்ச் செய்திகளை ஒலிபரப்பி வருகின்றது என விடுதலைப் புலிகளின் குரல் நேற்றிரவு தெரிவித்தது

விடுதலைப் புலிகள் மீதும், தமிழீழ மக்கள் மீதும் அளவிலாத அன்பு வைத்திருக்கும் இந்திய வானொலி நேற்றுக் காலை புதிதாக ஒரு புரளிக் கதையை கட்டவிழ்த்து விட்டுள்ளது அதாவது ராஜீவ் காந்தியின் மரணத்திற்கு சாமிகள் தான் காரணம் என்று விடுதலைப் புலிகள் ஒப்புக் கொண்டு விட்டதாகவும் புலிகளின் மத்திய உறுப்பினர் ஒருவர் கொழும்பிலுள்ள இந்திய தூதரக அதிகாரிகளிடம் இதனைக் கூறியதாகவும் கொழும்பு பத்திரிகை ஒன்றை மேற்கோள்காட்டி இந்திய வானொலி தெரிவித்தது. ராஜீவ் காந்தியின் மரணத்திற்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமுமில்லையென்று விடுதலைப்புலிகள் இயக்கம் அதிகாரபூர்வமாக பல தடவைகள் மறுப்புத் தெரிவித்திருக்கிறது. ஆதாரமெதுவுமின்றி பொறுப்பற்ற முறையில் வீண்பழி சுமத்த வேண்டாம் எனவும் கண்டித்திருக்கிறது. ஆயினும் விடுதலைப்புலிகள் மீது தொடர்ந்தும் இந்திய வெகுசனத் தொடர்பு சாதனங்கள் வீண்பழி சுமத்தி வருகின்றன.

நீண்ட புலன் விசாரணையின் பின்னரும் இந்தக் குற்றச்சாட்டை ஆதார பூர்வமாக நிரூபிக்க இந்திய அரசினால் முடியவில்லை. அதனாலேயே இயலாக் கட்டத்தில் ஒரு புரளிக் கதையைக் கட்டவிழ்த்துவிட்டு புலிகளைக் குற்றவாளிகளாகக் காட்ட இந்திய அரசு முயற்சிக்கிறது போலும். இந்திய அரசின் ஊதுகுழலான இந்திய வானொலி இந்தப் பொய்ப் பிரசாரச்செய்தியை மிகைப் படுத்துவதற்கு இதுவேகாரணமாக இருக்கலாம்.

### கட்டைக்காட்டில்

யில் பலமான துப்பாக்கிச் சண்டை மிகக் குறுகிய இடைதூரத்தில் நடைபெற்றது

இம் மோதலின்போது ஒரு உயர் அதிகாரி கொல்லப்பட்டதுடன் இருபதிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பல இராணுவத்தினர் காயமடைந்தனர்.

அதேவேளை விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம் பெற்றுக் கொண்டிருக்கையில் சிறிலங்கா விமானப்படை விமானங்களும் ஹெலிகப்டர்களும் பலத்த குண்டு வீச்சை நிகழ்த்திக் கொண்டிருந்தன. ஆனால் விடுதலைப்புலிகளின் பலமான விமான எதிர்ப்புத் தாக்குதலினால் விமானங்கள் இலக்குகளை நோக்கி குண்டுகளை வீசாமல் மிக உயரத்திலிருந்து குண்டுகளைப்போட்டவண்ணமிருந்தன.

இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் சற்றுப் பின்வாங்கி நிலை எடுத்துள்ளனர். அதேவேளை விடுதலைப்புலிகள் சற்று முன்னேறி இராணுவத்தினரைத் தொடர்ந்தும் தாக்கி வருவதாகவும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை மோதல் தொடர்வதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### ஆனையிறவு

நேற்று அதிகாலையில் இருந்து இவை ஆனையிறவை நோக்கி விமானப்படையின் உதவியுடன் முன்னேறி வருவதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிறிலங்கா இராணுவத்தின் இப் போர் நடவடிக்கை பற்றிச் செய்தி வெளியிட்ட பி.பி.ஸி நிலைத்திலும், தரையிலும் இராணுவம் இறக்கப்படும் நிலையானது சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் கூறுவது போன்று ஆனையிறவுமுகாம் நெருக்கடியில் இல்லை என்பதை ஏற்க முடியாது உள்ளது எனத் தெரிவித்தது. மேலும், இப்படையிறக்கம் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையில் கடந்த ஒரு வருடமாக நிகழும் போரில் நிகழும் மிகப் பெரிய படை இறக்கம் எனவும் குறிப்பிட்டது.

### எழுத்தாளர்

விதகாயமும் இன்றித் தப்பித்துக் கொண்டனர்.

பேசின்பநாயகம் நெல்லை க. பேரன் என்னும் பெயரில் கதைகள் எழுதியவர் என்பது குறிப்பிடத்தக்கது

இறந்த நால்வரினதும் பூதவுடல்கள் ஒரே வாகனத்தில் ஏற்றப்பட்டு அலங்கட்டை மயானம் கொண்டுசெல்லப்பட்டது.

## சண்முகம் பொலிஸில் சரண்

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக மத்திய புலனாய்வுத் துறையினரால் தேடப்பட்டு வந்த வேதாரணியத்தைச் சேர்ந்த நிலச் சுவாந்தர் சண்முகம் நேற்றுத் தஞ்சாவூர் பொலிஸில் சரணடைந்தார்.

இவரது வீட்டில் சில நாட்களுக்கு முன் பொலிஸ் தேடுதல் நடாத்தியது. அப்போது சில பொருள்களும், ஆவணங்களும் கைப்பற்றப்பட்டதாக ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

### மலர் தூவி

மக்கள் சாரிசாரியாக வந்து கண்ணீர் மல்க தமது இறுதி அஞ்சலிகளைச் செலுத்தினர். அதன்பின் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்று புகழுடல்கள் தாங்கிய பேழைகள் ஊர்வலமாக பாண்ட்வாத்திய இசையுடன் பலாலி வீதியூடாக எடுத்துச் செல்லப்பட்டு உரும்பராய் சந்தியூடாகக் கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அதேபோல அராலிதெற்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த மூன்று போராளிகளுக்கு அஞ்சலி தெரிவித்து அராலிப்பகுதி முழுவதும் நேற்று ஒரே சோகமயமாகக் காட்சியளித்தது. அனைத்து இடங்களிலும் தோரணங்களும், வாழைகளும் கட்டப்பட்டு சோககீதம் இசைக்கப்பட்டது. வியாபார நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. (20, 43)